Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines) 4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 249 | உள்ளூர் - 06.09.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 249 | வெளியூர் - 07.09.2026 | திங்கட்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

குடும்ப பிரச்சனைகள் தீர பரிகாரங்கள்!

டி.என்.பி.எஸ்.சி–ல் 170 அரசு வேலைகள்!

வடக்கில் பிரபலமாகும் முதல்வர்!

மத்திய அரசு ஊழியர்களுக்கு டி.ஏ. உயர்வு!




டெல்லியில் நடைபெற்ற தேசிய நல்லாசிரியர் விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டு, 48 ஆசிரியர்களுக்கு தேசிய நல்லாசிரியர் விருது வழங்கி ஜனாதிபதி திரவுபதி முர்மு கௌரவித்தார்.

## அமெரிக்காவை நம்ப முடியாதா?

# இந்தியா காட்டிய பாதையில் ஐரோப்பா! பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து தங்கத்தை மீட்பு

## தங்கம் தாயகம் திரும்புகிறது!!



வாஷிங்டன், செப். 06–

உலக நாடுகளின் முக்கியமான பாதுகாப்புச் சொத்தாக தங்கம் மாறியுள்ள நிலையில், பல நாடுகள் வெளிநாடுகளில் சேமித்து வைத்துள்ள தங்கத்தை தாய்நாட்டுக்கு திருப்பி கொண்டு வருகின்றன. அமெரிக்கா ரஷ்யா மோதல், பொருளாதாரத் தடைகள், வர்த்தகப் பதற்றம் மற்றும் போர் அச்சம் ஆகியவை இந்த நடவடிக்கைக்கு முக்கிய காரணங்களாக கூறப்படுகின்றன.

இந்தியாவும் சமீப ஆண்டுகளில் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளில் இருந்த தங்கத்தை இந்தியாவுக்கு மாற்றியுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியிடம் உள்ள சுமார் 880 டன் தங்கத்தில் 78 சதவீதம் தற்போது இந்தியாவுக்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேபோல் பிரான்ஸ் 129 டன் தங்கத்தையும், நெதர்லாந்து 86 டன் தங்கத்தையும் வெளிநாடுகளில் இருந்து மாற்றியுள்ளதாக கூறப்படுகிறது. அமெரிக்காவில் அதிக அளவில் தங்கம் வைத்திருந்த ஜெர்மனியும் சுமார் 300 டன் தங்கத்தை தாய்நாட்டுக்கு கொண்டு வந்துள்ளது. பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டால் தங்கம் முடக்கப்படும் அபாயத்தை தவிர்க்கவும், நாட்டின் பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்யவும் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# முதல்-அமைச்சர் விஜய் காவலர் தின வாழ்த்து!

சென்னை, செப். 06–




முதல்–அமைச்சர் விஜய் காவலர் தினத்தையொட்டி காவல்துறையினர் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்து ள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளபதிவில் கூறி இருப்பதாவது:–

1859–ஆம் ஆண்டு மெட்ராஸ் மாவட்டக் காவல் சட்டத்தை நிறைவேற்றி, நவீன மற்றும் அமைப்புரீதியான காவல்துறை தோற்றுவிக்கப்பட்ட நாளை நினைவுகூரும் வகையில் கொண்டாடப்படும் காவலர் நாளை முன்னிட்டு, சமூகத்தில் அமைதி நிலவிடவும், சட்டத்தின் ஆட்சி நிலைபெறவும் தன்னலமின்றிப் பணியாற்றிவரும் காவல்துறையினர் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த காவலா் தினம் நல்வாழ்த்து களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது மாநிலத்தில், குற்றங்களைத் தடுத்து, சட்ட ஒழுங்கைப் பேணுவதுடன், ஆபத்தான சூழல்களிலும், பேரிடர் காலங்களிலும் மக்களின் உயிர், உடைமை மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் துணிவுடன் நின்று களப்பணி ஆற்றிவரும் காவல்துறையினரின் வீரமும் தியாகமும் என்றும் போற்றத்தக்கவை. காவல்துறையினரின் பணிச்சுமையைக் குறைத்து, நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அவர்களின் பணித்திறனை மேம்படுத்தி, காவலர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் தேவையான நலத்திட்டங்களை உறுதிசெய்வதற்கும் நமது அரசு முன்னுரிமை அளிக்கும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பரந்தூர் திட்டம் ரத்து? புதிய விமான நிலையத்துக்கு 2 இடங்கள்!




சென்னை, செப். 06–

சென்னையின் 2–வது விமான நிலையத்தை அமைக்க பரந்தூருக்கு மாற்றாக செய்யூர் அல்லது மானெல்லூர்பகுதிகளை தமிழக அரசு பரிசீலித்து வருகிறது. இரு இடங்களிலும் ஆரம்பக்கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், AAI–யின் சாத்தியக்கூறு அறிக்கைக்குப் பிறகு இறுதி இடம் தேர்வு செய்யப்படும். புதிய விமான நிலையம் பயன்பாட்டுக்கு வர 5 முதல் 7 ஆண்டுகள் வரை ஆகலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கிராம சபைக் கூட்டங்களை வலுப்படுத்த முதல்வர் விஜய்க்கு கமல்ஹாசன் எம்பி கடிதம்!

சென்னை, செப். 06–



தமிழகத்தில் கிராம சபைக் கூட்டங்களை வலுப்படுத்த வேண்டும் என மாநிலங்களவை எம்பி கமல்ஹாசன் முதல்வர் விஜய்க்கு கடிதம் எழுதியு ள்ளார். தமிழ்நாடு முழுவதும் வருகிற அக்டோபர் 2 அன்று கிராம சபைக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன. இந்த நிலையில், கிராம சபை கூட்டங்களை பயனுள்ளதாகவும், வலுப்படுத்தவும் மாற்ற நடிகரும், மாநில ங்களவை எம்பியுமான கமல்ஹாசன் முதல்வர் விஜய்க்கு கடிதம் எழுதியுள்ளார். இதுதொடர்பாக அவர் தனது சமூக ஊடகப் பதிவில், ‘‘கிராம சபைக் கூட்டங்களை, அடிமட்ட ஜனநாயகத்தின் அர்த்தமுள்ள அமைப்புகளாக வலுப்படுத்த பின்வரும் பரிந்துரைகளைத் தெரிவித்து, தமிழக முதல்வர் விஜய்க்கு நான் கடிதம் எழுதியுள்ளேன்.

கிராம ஊராட்சிப் பிரதிநிதிகளுக்கான மதிப்பூதியத்தை உயர்த்த வேண்டும்.

உள்ளூர் டாஸ்மாக் கடைகள் குறித்து முடிவெடுக்கும் அதிகாரத்தை கிராம சபைகளுக்கு வழங்க வேண்டும்.

கிராம சபை பற்றிய விழிப்புணர்வையும், அதில் பொதுமக்களின் பங்கேற்பையும் அதிகரிக்க வேண்டும்.

கிராம சபைத் தீர்மானங்கள் மீது குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்ய வேண்டும்.

கிராம சபையின் நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிப்பதில் குடிமக்களுக்கு அதிக உரிமைகளை வழங்க வேண்டும்.

ஆராய்ச்சி மற்றும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை உள்ளாட்சி நிர்வாகத்தில் வலுப்படுத்த வேண்டும்.

கிராமங்களை மேம்படுத்தும் திட்டமிடலை மக்கள் பங்கேற்பு கொண்டதாக மாற்ற வேண்டும்.

அடிமட்ட அளவிலான பொறுப்புக்கூறல் கலாச்சாரத்தை வலுப்படுத்த வேண்டும்.

காந்தியடிகளின் கிராம சுயராஜ்யம் என்கிற தொலைநோக்குப் பார்வை, கிராமங்கள் அதிகாரம் பெறுதல் மற்றும் ஜனநாயகத்தில் மக்களின் பங்கேற்பு ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. கிராம நிர்வாகத்தில் இந்தியாவிலேயே முன்மாதிரி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதே, காந்தியின் உன்னதமான கொள்கைகளுக்கு செலுத்தும் மரியாதையாக அமையும்’’ என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனுடன், கமல்ஹாசன் தான் எழுதிய கடிதத்தையும் இணைத்துள்ளார்.

# மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேக பூஜைகள் தொடக்கம்!



மதுரை, செப். 06–

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம் வரும் 17–ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான பூர்வாங்க பூஜைகள் இன்று தொடங்கி 11–ம் தேதி வரை நடைபெறுகின்றன. விக்னேஸ்வர பூஜை, கஜபூஜை, கோ பூஜை உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. கும்பாபிஷே கத்திற்காக 184 யாக குண்டங்கள், 56 யாகசாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், கங்கை உள்ளிட்ட 7 புண்ணிய நதிகளில் இருந்து 1,008 லிட்டர் புனிதநீர்கொண்டு வரப்பட்டுள்ளது.

# உலக வரைபடத்தில் அதிரடி மாற்றம்! ‘Equal Earth’க்கு ஐ.நா. ஆதரவு!

புதுடெல்லி, செப். 06–



உலக நாடுகளின் உண்மையான பரப்பளவை துல்லியமாகக் காட்டும் வகையில் ‘Equal Earth’ வரைபட முறையை ஊக்குவிக்கும் தீர்மான த்தை ஐ.நா. பொதுச் சபை நிறைவேற்றியுள்ளது. செப்.4–ம் தேதி நடைபெற்ற வாக்கெடுப்பில் 164 நாடுகள் ஆதரவாகவும், அமெரிக்கா எதிராகவும் வாக்களித்தன; 6 நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. இந்தியாவும் தீர்மானத்தை ஆதரித்தது.

1569–ல் உருவாக்கப்பட்ட Mercator வரைபடத்தில் பூமத்திய ரேகையிலிருந்து தொலைவில் உள்ள பகுதிகள் உண்மையான அளவைவிட பெரிதாகத் தோன்றுகின்றன. இதனால் ஆப்பிரிக்கா போன்ற கண்டங்கள் சிறியதாகவும், கிரீன்லாந்து மிகப்பெரியதாகவும் காட்சியளிக்கிறது. உண்மையில், ஆப்பிரிக்கா கிரீன்லாந்தைவிட சுமார் 14 மடங்கு பெரியது.

# பீகாரில் எக்ஸ்பிரஸ் ரயிலின் 2 பெட்டிகள் தடம்புரண்டு விபத்து!

பீகார், செப். 06–



பீகார் மாநிலம், ஆரா சந்திப்பு ரயில் நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தில்லி செல்லும் சிக்கிம் மகாநந்தா எக்ஸ்பிரஸ் ரயிலின் இரண்டு பெட்டிகள் தடம் புரண்டதாக மூத்த அதிகாரி தெரிவித்தார். அதிகாலை 4 மணியளவில் நடந்த இந்த விபத்தில் யாருக்கும் எவ்வித காயமும் ஏற்படவில்லை. எனினும், விபத்து காரணமாக ரயில் போக்குவரத்து சற்று பாதிக்கப்பட்டு ள்ளது. ஆரா சந்திப்பில் இருந்து ரயில் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே இந்த சம்பவம் நடந்துள்ளது. ஓட்டுநர் சிவப்பு சிக்னலைத் தாண்டிச் சென்றதால் அவர் செய்த தவறின் காரணமாகவே இந்த ரயில் தடம் புரண்டதாக முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இருப்பினும், விரிவான விசாரணைக்குப் பிறகே விபத்துக்கான துல்லியமான காரணம் தெரியவரும் என ரயில்வே அதிகாரி தெரிவித்தார். இந்த விபத்தால் டவுன்லைன் வழித்தடம் பாதிக்கப்படவில்லை என்றும், காலை 7.23 மணியளவில் ஆரா சந்திப்பு நிலையத்திலிருந்து அந்த ரயில் புறப்பட்டுச் சென்றது என்றும் தலைமை மக்கள் தொடர்பு அதிகாரி கூறினார்.

# 2026 உலக அழகி: டொமினிகன் அழகி வெற்றி!




புதுடெல்லி, செப். 06–

வியட்நாமின் நஹா ட்ராங் நகரில் நடைபெற்ற 73வது உலக அழகிப் போட்டியின் இறுதிச்சுற்றில், டொமினிகன் குடியரசைச் சேர்ந்த ஜோஹெய்ரி மோலா 2026ஆம் ஆண்டின் உலக அழகியாகத் தேர்வு செய்யப்பட்டார்.

இந்தியா சார்பில் பங்கேற்ற நிகிதா போர்வால் முதல் 40 இடங்களுக்குள் முன்னேறிய நிலையில், முதல் 20 இடங்களுக்குள் இடம்பெற முடியாமல் போட்டியிலிருந்து வெளியேறினார்.

மதுரை மணி
தலையங்கம்
ஞாயிற்றுக்கிழமை 06.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 20-ம் தேதி

# அமெரிக்கா மீது நம்பிக்கை போனதா?



உலகின் பல்வேறு நாடுகளின் மத்திய வங்கிகளும் டன் கணக்கில் தங்கத்தை வாங்கி இருப்பு வைத்துள்ளன. அவசரகால பொருளாதார சிக்கல்களை எதிர்கொள்ளவும் நாட்டின் கரன்சிக்கு அரணாகவும் தங்கத்தை பயன்படுத்துகின்றன.

பெரும்பாலான நாடுகளின் வங்கிகள் தங்கத்தை தங்கள் நாட்டில் இல்லாமல் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் உள்ள கிடங்குகளில் பத்திரமாக வைத்துள்ளன. அப்படி பல நாடுகளும் நம்பிக்கையோடு தங்கத்தை வைத்திருந்த ஒரு நாடு அமெரிக்கா. ஆனால் டிரம்பின் பதவி காலத்தில் உலக நாடுகள் அமெரிக்கா மீதான நம்பிக்கையை இழந்து வருகிறதா என்ற கேள்வி எழுகிறது. நெதர்லாந்து அரசு தனது தங்க கட்டிகளை அண்மையில் அமெரிக்காவில் இருந்து எடுத்து அவசர அவசரமாக லண்டனுக்கு இடம் மாற்றம் செய்துளது. பிரான்ஸ் தனது தங்கத்தை நியூயார்க்கிலிருந்து ஐரோப்பாவிற்கு மாற்றியுள்ளது. தற்போதைய புவிசார் அரசியல் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பல நாடுகளும் தங்கத்தை அமெரிக்காவில் இருந்து வெளியேற்றி வருகின்றன.

நெதர்லாந்தின் மத்திய வங்கியான De Nederlandsche Bank கடந்த மார்ச் முதல் ஆகஸ்ட் வரையிலான காலக்கட்டத்தில், அமெரிக்கா மற்றும் கனடாவில் இருந்த சுமார் 86 டன் தங்கத்தை லண்டனுக்கு மாற்றியுள்ளது. இதில் 78 டன்னுக்கும் அதிகமான தங்கம் நியூயார்க்கிலிருந்தும், சுமார் 7 டன் தங்கம் ஒட்டாவாவிலிருந்தும் மாற்றப்பட்டது. இதனால் நியூயார்க்கில் உள்ள நெதர்லாந்து தங்கத்தின் பங்கு 31.3% இலிருந்து 18.5% ஆக குறைந்துள்ளது. அதேபோல லண்டனில் உள்ள பங்கு 18.1% இலிருந்து 32.1% ஆக உயர்ந்தது. இதன் மூலம் நெதர்லாந்தின் தங்க இருப்புக்கான முக்கிய மையமாக லண்டன் மாறியுள்ளது. அதிகரித்து வரும் புவிசார் அரசியல் சூழல்கள் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக DNB கவர்னர் ஸ்லீஜெபன் கூறியுள்ளார். அவசர காலங்களில் தங்கத்தை உடனடியாக பயன்படுத்தவும், அதன் வணிக தன்மையை அதிகரிக்கவும் இது உதவும் என கூறியுள்ளார். இதே போல பிரான்சின் மத்திய வங்கியான Banque de France, நியூயார்க்கில் வைக்கப்பட்டிருந்த 129 டன் தங்கத்தை ஐரோப்பாவிற்கு மாற்றியுள்ளது.ஆனால் லண்டன் புல்லியன் மார்க்கெட் அசோசியேஷன் நிர்ணயித்த 99.99% தூய்மை தரம் நியூயார்க்கில் வைக்கப்பட்டிருந்த தங்க கட்டிகளில் இல்லை என்பதற்காக இந்த மாற்றம் செய்யப்பட்டதாக விளக்கம் தந்தது.

இந்தியா பொறுத்தவரை நம் ரிசர்வ் வங்கியிடம் 880.52 டன் தங்கம் உள்ளது. இதில் 680.05 டன் தங்கம் , அதாவது சுமார் 77% இந்தியாவிற்குள்ளேயே உள்ள பாதுகாப்பு பெட்டகங்களில் வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 200.47 டன் தங்கம் மட்டுமே வெளிநாடுகளில் அதாவ்து லண்டன் போன்ற இடங்களில் வைக்கப்பட்டுள்ளது. 2025 மார்ச் மாதம் 511.98 டன் தங்கம் மட்டுமே இந்தியாவில் இருந்தது. ஆனால் கடந்த ஒரே ஆண்டில் சுமார் 168 டன் தங்கம் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவிற்குள் கொண்டுவரப்பட்டு உள்நாட்டு இருப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த திடீர் மாற்றத்திற்கான காரணத்தை ஆர்பிஐ அதிகாரப்பூர்வமாக விளக்கவில்லை. ஜெர்மனி கூட கடந்த 2013 மற்றும் 2017 ஆண்டுகளுக்கு இடையில் நியூயார்க் மற்றும் பாரிஸில் இருந்த சுமார் 300 முதல் 374 டன் தங்கத்தை தனது சொந்த நகரான பிராங்க்பர்ட்டுக்கு இடம் மாற்றம் செய்தது. ஒரு நாட்டிற்கும் அதன் மத்திய வங்கிக்கும் தங்கம் வாங்குவது மட்டுமல்ல அதனை பாதுகாப்பது பெரிய சவால். தங்கத்தை பாதுகாப்பான இடத்தில் வைக்க வேண்டும் இன்சூரன்ஸ் செலுத்த வேண்டும் அடிக்கடி கணக்கு செய்து பார்க்க வேண்டும் என பல சவால்கள் இருக்கின்றன. இதனால் தான் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் தங்கத்தை பராமரிக்க பெரும்பாலான நாடுகள் விரும்புகின்றன. ஆனால் அமெரிக்க அரசின் கடன்கள் அதிகரிப்பு, திடீர் திடீரென நிலைபாட்டை மாற்றும் டிரம்ப் என பல காரணங்களால் அமெரிக்காவில் இருக்கும் தங்கத்தை உலக நாடுகள் வெளியே எடுப்பதாக கூறப்படுகிறது. திடீரென விதிக்கப்படும் வர்த்தக வரிகள், போர்கள் ஆகிய காரணங்களால் தங்கம் இன்னும் பாதுகாப்பான இடத்தில் இருந்தால் நல்லது என கருதி இப்படி செய்வதாக சொல்லப்படுகிறது.

# ராமேசுவரம்-மண்டபம் படகு சேவை: அதிகாரிகள் ஆய்வு!



ராமேசுவரம், செப். 06–

ராமேசுவரம் அக்னி தீர்த்தக் கடற்கரையில் இருந்து பாம்பன் பாலம் வழியாக மண்டபத்துக்கு விரைவில் பயணிகள் படகு சேவை தொடங்கப்பட உள்ளது. இதற்காக கடலின் ஆழம், பயணத் தூரம், புதிய ரயில்வே தூக்குப் பாலத்தின் கீழ் படகு செல்லும் உயரம் உள்ளிட்டவற்றை கடல்சார் வாரிய அதிகாரிகள் ஆய்வு செய்த னர். ஆய்வு முடிவின் அடிப்படையில் சேவையைத் தொடங்கு வதற்கான பணிகள் விரைவில் தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதமர் வேட்பாளர்; தொண்டர்களின் மனநிலையில் இருக்கும் தவெக அமைச்சர்கள்: திருமாவளவன்!



சென்னை, செப். 06–

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த தொல். திருமாவளவன், தமிழக சட்டப்பேரவைத் கூட்டத்தொடரில் மிக முக்கியமான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், ஆணவக் கொலை தடுப்புச் சட்டத்தை கொண்டு வருவதற்கான சூழல் கனிந்திருப்பதை அமைச்சர் வன்னியரசு உறுதி செய்துள்ளதாகவும், நீதிமன்ற உத்தரவின்படி ஆணவக் கொலை தடுப்பு மசோதா வரையறுக்க ப்படும் என்று இந்தக் கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாகவும் அவர் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், "தமிழக வெற்றிக் கழகத்துடன் கூட்டணி அமைப்பது தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் இரண்டாவது முறையாக நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தை அவர்களே ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றனர்.

அடுத்த கூட்டத்தில் விரிவாக பேசுவோம் எனக் கூறப்பட்டிருந்த நிலையில், தற்போது கூட்டம் நடைபெறுகிறது. இதில் யார் யார் பங்கேற்கிறார்கள், என்ன செய்யப் போகிறார்கள் என்பது கூட்டம் நடைபெறும் போதுதான் தெரியவரும். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியினர் தெரிவிக்கும் கருத்துகளில் நகைச்சு வைக்காகக் கூறப்படும் கருத்துகளை நகைச்சுவையாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசுகள் மேற்கொள்ள வேண்டும். தமிழகத்தில் கொலை, கொள்ளை உள்ளிட்ட குற்றச் சம்பவங்கள் அதிகரித்து வருவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். யார் ஆட்சியில் இருந்தாலும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகள், ஆசிரியர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை திரும்பப் பெறுவதாக முதல்வர் 110 விதியின் கீழ் தீர்மானம் நிறைவேற்றியிருப்பது வரவேற்கத்தக்கது" என்றார்.

செய்தியாளர் சந்திப்பு முடிந்த பிறகு, தமிழக வெற்றிக் கழகத்தின் பிரதமர் வேட்பாளர் விஜயா என கேள்வி எழுப்பப்பட்ட நிலையில், அதற்கு பதிலளிக்க மீண்டும் திரும்பி வந்த தொல். திருமாவளவன், "தமிழக வெற்றிக் கழகத்தின் முன்னணித் தலைவர்கள் பிரதமர் வேட்பாளர் விஜய் என இதுவரை பேசவில்லை. ஆனால் மற்றவர்கள் அவ்வாறு பேசி வருகின்றனர். அதைக் கட்சியின் அதிகாரப்பூர்வ நிலைப்பாடு என்று எடுத்துக்கொள்ள முடியாது" எனத் தெரிவித்தார்.

"என்னதான் அமைச்சர்களாக இருந்தாலும், தொண்டர்களின் மனநிலை இருக்கத்தான் செய்யும். வடஇந்திய ஊடகங்கள் பிரதமர் வேட்பாளர்கள் வரிசையில் பிரதமர் மோடி, ராகுல் காந்தி ஆகியோருடன் விஜய்யையும் குறிப்பிட்டு வருவதைப் பார்க்கிறோம். இதன் காரணமாக தமிழக வெற்றிக் கழகத்தினர் உற்சாகத்துடன் அவ்வாறு பேசி வருகிறார்கள். ராகுல் காந்தி பிரதமர் வேட்பாளர் இல்லை என்று யாரும் கூறவில்லை. பிரதமர் வேட்பாளர் தொடர்பாக பேச வேண்டிய நேரத்தில் பேசுவோம். 2029 தேர்தல் வரட்டும், அப்போது அது குறித்து கூறுகிறேன்" என தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

# பணிக்கு திரும்பாத டாஸ்மாக் மேற்பார்வையாளர்கள் 33 பேர் பணியிடை நீக்கம்!




சென்னை, செப். 06–

டாஸ்மாக் நிர்வாகத்தின் பேச்சுவார்த்தைக்கும் உடன்படாமல் 33 டாஸ்மாக் கடைகளில் மேற்பார்வையாளர்கள் கடைகளை திறக்காமல் காலம் தாழ்த்தி வந்தனர். டாஸ்மாக் நிர்வாகத்தின் உத்தரவை தொடர்ந்து பிற பணியாளர்கள் கடைகளை திறந்தனர். டாஸ்மாக் கடை களை திறக்காத 33 மேற்பார்வையாள ர்களுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இது குறித்து உரிய பதில் வராததால் காஞ்சீபுரம் தெற்கு மாவட்ட டாஸ்மாக் நிர்வாக மண்டல மேலாளர், 33 டாஸ்மாக் கடைகளின் மேற்பார்வையா ளர்களை பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டார்.

# தவெக-காங்கிரஸ் கூட்டணி எந்த நேரத்திலும் முறியலாம்: ராஜேந்திர பாலாஜி ஆருடம்!



விருதுநகர், செப். 06–

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் அதிமுக முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:–

சட்டமன்றத்துக்கு புதிய உறுப்பினர்கள் வந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு போதிய அனுபவம் இல்லை. சில மாதங்களில் அவர்களுக்கு தேவையான அனுபவம் கிடைத்துவிடும். எனவே தற்போது சட்டமன்றத்தில் நடைபெறும் சம்பவங்களை நகைச்சுவையாக பார்க்கக்கூடாது. ஒவ்வொரு கட்சியில் உள்ள தொண்டர்கள் அவர்களது தலைவரை ஜனாதிபதியாக, பிரதமராக, முதல்–அமைச்சராக கற்பனை செய்து பார்ப்பது வழக்கம். அதனை யாரும் தடுக்க முடியாது. அதேபோலதான் விஜய் ரசிகர்கள் தங்களது தலைவரை பிரதமராக கற்பனை செய்து பார்க்கிறார்கள். பிரதமர் மோடி வலுவான ஒரு தலைவராக இருக்கிறார். அவரை எதிர்கொள்ளக் கூடிய துணிச்சல் யாருக்கும் இல்லை.

காங்கிரஸ்–தவெக கூட்டணி எந்த நேரத்திலும் முறியலாம். எப்போது வேண்டும் என்றாலும் இந்த ஆட்சிக்கு ஆபத்து வரலாம். இதனை உணர்ந்து அவர்கள் செயல்பட வேண்டும். ஜெயலலிதா ஆட்சி காலத்தில் புதிய சட்டமன்றம் கட்ட முடிவு செய்யப்பட்டது. அதற்கு தி.மு.க. முட்டுக்கட்டை போட்டது. த.வெ.க. ஆட்சியில் புதிய சட்டமன்றம் அமைந்தால் மகிழ்ச்சி. இவ்வாறு அவர் கூறினார்.

# டெல்டா பாசனத்துக்காக கல்லணையில் இருந்து தண்ணீர் திறப்பு!



சென்னை, செப். 06–

டெல்டா பாசனத்துக்காக கல்லணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. நெல்மணிகளையும் மலர்களையும் தூவி வேளாண் துறை அமைச்சர் வினோத் மற்றும் அமைச்சர் ஷாஜகான் ஆகியோர் திறந்து வைத்தனர். மேட்டூர் அணையில் நிகழாண்டு போதுமான அளவுக்கு தண்ணீர் இருப்பு இல்லாததால், உரிய காலத்தில் திறக்கப்படாமல் தள்ளிப் போனது. இதனிடையே, அணையில் கடந்த வாரம் 90 அடியை எட்டியதைத் தொடர்ந்து, டெல்டா பாசனத்துக்காக அணையைத் முதல்வர் விஜய் செப். 1–ஆம் தேதி திறந்து வைத்தார். அணையிலிருந்து விநாடிக்கு 7 ஆயிரம் கனஅடி வீதம் திறக்கப்படும் தண்ணீர், கரூர் மாவட்டம் மாயனூருக்கு வியாழக்கிழமையும், திருச்சி மாவட்டம் முக்கொம்புக்கு வெள்ளிக்கிழமையும் வந்தடைந்தது.

இதைத்தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டம் கல்லணைக்கு தண்ணீர் சனிக்கிழமை வந்தது. மொத்தம் 10 அடி உயரம் கொண்ட கல்லணையில் சனிக்கிழமை மாலை நிலவரப்படி நான்கரை அடியை எட்டியது. குடிநீருக்காக கொள்ளிடத்தில் விநாடிக்கு 480 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

இந்த நிலையில், டெல்டா பாசனத்துக்காக கல்லணையிலிருந்து காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய், கொள்ளிடம் ஆகியவற்றில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

காவிரியில் 1000 கன அடி, வெண்ணாற்றில் 1000 கன அடி, கல்லணைக் கால்வாயில் 500 கன அடி, கொள்ளிடம் ஆற்றில் 500 கன அடி வீதம் திறக்கப்பட்டுள்ளது.

# அனைத்து கேள்விகளுக்கும் முதல்வர் பதிலளிப்பார்: அமைச்சர் அருண்ராஜ்!



சென்னை, செப். 06–

அனைத்து கேள்விகளுக்கும் முதல்வர் விஜய் பதிலளிப்பார் என சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அருண்ராஜ் ஞாயிற்றுக்கிழமை (செப். 6) தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் தவெக அரசின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து, நான் கேட்கும் கேள்விகளுக்கு எல்லாம் அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து முதல்வர் நன்றாக தயாராகி, திங்கள்கிழமை பதில் கூற வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வியாழக்கிழமை (செப். 3) தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த முதல்வர் விஜய், "உறுப்பினர்கள் கேட்கும் அனைத்து கேள்விகளுக்கும் திங்கள்கிழமை விளக்கமாக பதிலளிப்பேன். நான் பேரவையில் இல்லையென்றாலும் அனைத்து கேள்விகளும் எனக்கு வந்துவிடும். தெளிவான பதிலளிப்பேன்.

ஆனால், உங்கள் மூலம் ஒன்றை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நான் பேசும்போது யாரும் ஓடக் கூடாது என சத்தியம் செய்யுங்கள்" என்று கூறினார்.

இதுகுறித்து அமைச்சர் அருண்ராஜ் இன்று பேசியதாவது: எதிர்க்கட்சித் தலைவர் மட்டுமல்லாமல் அனைத்துத் தலைவர்களும் கேள்வி கேட்டனர். அனைத்துக் கேள்விகளுக்கும் முதல்வர் பதிலளிப்பார். இந்த அரசும், ஜனநாயகமும், சட்டப்பேரவையும் மக்களுக்கானவை.

முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், உறுப்பினர், அமைச்சர் என யாராக இருந்தாலும் சட்டப்பேரவையில் எதுவேண்டுமானாலும் பேச அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால் அவர்களுடைய பேச்சு, மக்களின் உணர்வுகளையும் மனநிலைகளையும் பிரதிபலிக்க வேண்டும்.

வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் ஆற்றிய உரையானது, திமுக ஆட்சிக் காலத்தில் சட்டம் ஒழுங்கு மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டதாகவும், கடந்த 100 நாள்களில் மட்டுமே அது சீர்குலைந்துள்ளதாகவும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியது. ஆனால், நிலைமை அப்படி இல்லை, அது அனைவருக்கும் தெரியும் என்று அமைச்சர் அருண்ராஜ் குறிப்பிட்டார்.



# குடும்ப பிரச்சனைகள் தீர பரிகாரங்கள்!



குடும்ப வாழ்க்கையில் ஏதேனும் ஒரு பிரச்சனைகள் அல்லது முக்கிய பொறுப்புகளை முடிக்க வேண்டிய சூழல் நிறைந்திருக்கும். இருப்பினும் அதற்காக குடும்பத்தில் உங்கள் துணை அல்லது, குடும்ப உறுப்பினர்களிடம் சண்டை அல்லது கருத்து வேறுபாடுகள் அடிக்கடி ஏற்படுவது சரியான விஷயமாக கருதப்படுவதில்லை. ஒருவருடைய வீட்டில் அமைதியும் மகிழ்ச்சியும் இல்லாவிட்டால், தேவையற்ற கருத்து வேறுபாடுகள் கூடிக் கொண்டே செல்லும். அதற்கான காரணம் என்ன? அவற்றை தீர்க்க சில எளிய பரிகாரங்கள் இங்கு பார்ப்போம்.

**உலர்ந்த துளசி செடி**

வீட்டின் எதிர்மறை ஆற்றல் நிறைந்திருந்தால் அந்த வீட்டில் தேவையற்ற உனக்கு வாதங்களும் சண்டைகளுக்கும் வழிவகுக்கும். உங்களுடைய வீட்டில் துளசி செடி வளர்த்து வந்தால் அதை ஒருபோதும் வாட விட வேண்டாம். உலர்ந்த நிலையில் துளசி செடி வைத்திருப்பதால் வீட்டில் தேவைப்பட்ட எதிர்மறை ஆற்றல் அதிகரித்து, கஷ்டங்களும், வாக்குவாதங்களும் ஏற்படும் சூழல் உருவாகும். அதனால் துளசி செடியை பசுமையாக வைத்து பராமரிக்கவும். மேலும் தினமும் துளசி செடியை வழிபடுவது நன்மை தரும்.

**உப்பு நீரால் தரையை துடைத்தல், உடைந்த சிலைகள்**

**உப்பு நீரால் தரையை துடைத்தல்**

உங்களுடைய வீட்டில் உள்ள கண் திருஷ்டி மற்றும் எதிர்மறை ஆற்றல் விலக, வாரத்திற்கு குறைந்தது இரண்டு அல்லது மூன்று முறையாவது சிறிதளவு மஞ்சள் தூளும், உப்பு கலந்து நீரால் தரையே துடைப்பது அவசியம். இது உங்களுடைய வீட்டில் நேர்மறையான ஆற்றலையும் அமைதியான சூழலையும் கொண்டு வரும். மேலும் வீட்டில் கிருமிகளும் அழியும்.

**உடைந்த சிலைகள்**

உங்கள் வீட்டில் எந்த பகுதியில் உடைந்த சிலைகளை வைத்திருக்கக் கூடாது. வீட்டில் உடைந்த சிலைகளை வைத்திருப்பதால், நேர்மை ஆற்றலை விட எதிர்மறை ஆற்றல்கள் அதிகமாக தரும் நினைவே உங்களுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவ வேண்டும் எனில், அப்பொழுது இந்த சிலைகளை உடனடியாக அகற்றவும்.

**சூரிய வழிபாடு, கங்கை நீர் தெளிக்கவும் சூரிய வழிபாடு**

தினமும் காலையில் சூரிய நமஸ்காரம் செய்வதும் குளித்துவிட்டு சூரியனை வழிபாடு செய்வதும் உங்களுடைய ஜாதகத்தில் சூரியனுடைய பலத்தை நடிகரிப்பது மட்டுமல்லாமல், உங்கள் வீட்டின் சூழலும் நேர்மறை ஆற்றலால் நிரம்பி இருக்கும்.

**கங்கை நீர் தெளிக்கவும்**

உங்களுடைய வீட்டில் மங்கலம் நிறையவும், வீட்டில் உள்ள எதிர்மறை ஆற்றல்கள் நீங்கவும், வீடு முழுவதும் கங்கை நீரை தெளிக்கவும்.

**உடைந்த கண்ணாடி அகற்றவும்**

வீட்டில் சரியான இடத்தில் கண்ணாடி வைப்பது மிகவும் மங்களகரமானதாக கருதப்படுகிறது. இது வீட்டினுடைய அழகையும் நேர்மறை ஆற்றலையும் அதிகரிக்கும்.. அதே சமயம் உடைந்த கண்ணாடியை வீட்டில் வைத்திருப்பது, வாஸ்து சாஸ்திரத்தின்படி எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே உங்களுடைய உடைந்த கண்ணாடியை உடனடியாக வீட்டில் இருந்து அகற்றுவது நல்லது. இது தேவையற்ற கருத்து வேறுபாடுகளையும் , உறவுகள் இடையே மன வருத்தத்தை அதிகரிக்கும்.

**பொறுப்பு துறப்பு:**

இந்தக் கட்டுரையில் உள்ள தகவல்கள் முற்றிலும் உண்மையானவை அல்லது துல்லியமானவை என்று நாங்கள் கூறவில்லை. விரிவான தகவல்களுக்கு, தொடர்புடைய துறையில் உள்ள நிபுணரை அணுகவும்.

# மீன்கள் வரத்து அதிகரிப்பால் விலை சரிவு...!



தூத்துக்குடி, செப். 06–

தூத்துக்குடி திரேஸ்புரம் நாட்டு படகு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து ஏராளமான நாட்டு படகு மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் நேற்று ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க சென்ற நாட்டுப்படகு மீனவர்கள் கரைக்கு திரும்பினர்.

கரைக்கு திரும்பிய மீனவர்களுக்கு மீன்பாடு நன்றாக இருந்ததால் அவர்கள் பெரிய அளவிலான மீன்களை அதிகம் கொண்டு வந்தனர். இதனால் தூத்துக்குடி திரேஸ்புரம் மீன்பிடி துறைமுகத்தில் நேற்று அதிகளவில் மீன்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டு இருந்தது. மீன்கள் வரத்து அதிகம் காணப்பட்டதாலும், தசரா திருவிழா தொடங்கியதை தொடர்ந்து தூத்துக்குடி மாவட்டம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் உள்ள மக்கள் குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் கோவில் திருவிழாவிற்காக மாலை அணிந்து விரதம் இருந்து வருவதாலும் நேற்று குறைந்த அளவு பொதுமக்களை மீன்கள் வாங்க வந்திருந்தனர். இதனால் மீன்கள் விலையும் சற்று குறைந்தது. தூத்துக்குடி திரேஸ்புரம் நாட்டுப்படகு மீன்பிடி துறைமுகத்தில் நேற்று சீலா மீன் கிலோ ரூ.1000 வரையும், விளை மீன் கிலோ ரூ.600 வரையும், பாறை மீன் கிலோ ரூ.350 வரையும், ஊளி மீன் கிலோ ரூ.400 வரையும், நண்டு கிலோ ரூ.700 வரையும் தூத்துக்குடி திரேஸ்புரம் நாட்டுப்படகு மீன்பிடி துறைமுகத்தில் மீன்களின் விலை குறைந்து வருவதால் பொதுமக்களும், வியாபாரிகளும் மகிழ்ச்சி அடைந்து ஆர்வமுடன் வாங்கி சென்றனர். அதுபோல் மீன்பாடு நன்றாக இருப்பதால் மீனவர்களும் மகிழ்ச்சியடைந்து உள்ளனர்.




## குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே சர்க்கரையா? எதிர்கால ஆரோக்கியத்தை பாதிக்கலாம்!



குழந்தைகளுக்கு எப்போது, என்ன உணவு கொடுக்க வேண்டும் என்பது பெற்றோருக்கு முக்கியமான கேள்வியாக உள்ளது. குறிப்பாக, சிறு வயதிலேயே சர்க்கரை மற்றும் இனிப்பு உணவுகளை அதிகமாக கொடுப்பது எதிர்கால ஆரோக்கியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

குழந்தையின் வாழ்க்கையின் முதல் 1,000 நாட்கள் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான காலமாகக் கருதப்படுகிறது. இந்த காலகட்டத்தில் கிடைக்கும் உணவு மற்றும் ஊட்டச்சத்து, உடல் வளர்ச்சியுடன் பிற்கால ஆரோக்கியத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

பிரிட்டனில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்று, குழந்தைப் பருவத்தின் தொடக்கத்தில் சர்க்கரை உட்கொள்ளும் அளவுக்கும், பல ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்படும் சில உடல்நலப் பிரச்சனைகளுக்கும் இடையிலான தொடர்பை ஆய்வு செய்தது. சர்க்கரை ரேஷன் நடைமுறையில் இருந்த காலத்திலும், அது நீக்கப்பட்ட பின்னரும் பிறந்த சுமார் 64,000 பேரின் நீண்டகால உடல்நலத் தரவுகள் இதில் ஒப்பிடப்பட்டன. அதிக சர்க்கரை உட்கொள்வது உடல் எடை அதிகரிப்பு, உடல் பருமன் மற்றும் எதிர்காலத்தில் டைப்–2 நீரிழிவு போன்ற பிரச்சனைகளுக்கான அபாயத்தை அதிகரிக்கக்கூடும். மேலும், சிறு வயதிலேயே அதிக இனிப்பு சுவைக்கு பழகும் குழந்தைகள், பின்னரும் அதே சுவையை விரும்பும் வாய்ப்பு உள்ளது. எனவே, சர்க்கரையை முற்றிலும் தவிர்ப்பதைவிட, சேர்க்கை சர்க்கரை மற்றும் அதிக இனிப்பு உணவுகளின் அளவைக் கட்டுப்படுத்துவது முக்கியம். பழங்கள், காய்கறிகள், பருப்பு, பயறு, முழு தானியங்கள் மற்றும் புரதச்சத்து நிறைந்த உணவுகளை குழந்தைகளின் உணவில் சேர்ப்பது நல்லது.

### பொலிவியா ராணுவ தளம் வெடி விபத்து:

## 10 பேர் பலி, 50-க்கும் மேற்பட்டோர் காயம்!

பொலிவியா, செப். 06–

தென் அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு பொலிவியா. அங்குள்ள லா பாஸ் நகரில் இருந்து 30 கி.மீ தொலைவில் ராணுவ தளம் உள்ளது. இந்த ராணுவ தளத்தில் ஏராளமான ராணுவ வீரர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில், இந்த ராணுவ தளத்தில் பீரங்கி படைப்பிரிவில் நேற்று பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. இந்த வெடி விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர். மேலும், 50க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இந்த வெடி விபத்து குறித்து தகவலறிந்ததும் தீயணைப்பு வீரர்கள், ஆம்புலன்ஸ்கள், மருத்துவ குழுக்கள் சம்பவ இடத்துக்கு வந்து மீட்புப்பணிகளில் ஈடுபட்டனர்.

மீட்புக்குழுவினர் விரைந்து சென்று படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். படுகாயம் அடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான பட்டாசு பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த பகுதியில் இருந்தே வெடிவிபத்து தொடங்கியது என தெரிவித்த அதிகாரிகள், வெடி விபத்துக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அதிமுக மாவட்ட செயலாளர்களுடன் எடப்பாடி பழனிசாமி முக்கிய ஆலோசனை!



சென்னை, செப். 06–

தமிழ்நாட்டில் சமீபத்தில் நடைபெற்று முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக 3வது இடத்திற்கு தள்ளப்பட்டது அக்கட்சி தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தோல்வியால் கட்சிக்குள் மோதல்களும் கிளம்பி வருகின்றன. இதைத்தொடர்ந்து அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மாவட்டம் வாரியாக, கட்சியில் அனைத்து மட்டத்திலும் உள்ள நிர்வாகிகளை அழைத்து ஆலோசனை நடத்தி வருகிறார்.

அந்தவகையில், சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் மாவட்ட செயலாளர்களுடன் இன்று ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனையின் போது சட்டமன்ற தேர்தல் தோல்வி குறித்தும், விரைவில் நடைபெற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறுவது பற்றியும் விவாதித்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட மாவட்ட செயலாளர்கள், ஏற்கனவே பொறுப்பில் உள்ள மாவட்ட செயலாளர்கள் என அனைவரும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்களுடன் கட்சியின் தலைமை நிர்வாகிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அதிமுகவை மீண்டும் வலிமையான இயக்கமாக மாற்றுவதற்கு மாவட்ட செயலாளர்கள் அனைவரும், கட்சி நிர்வாகிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தினார்.

அதிமுக எம்எல்ஏக்கள் 6 பேர் தங்களது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு திமுகவில் இணைந்துள்ள நிலையில் நடைபெற உள்ள இடைத்தேர்தலில் மீண்டும் அதிமுகவை வெற்றிபெற வைத்து துரோகிகளுக்கு பாடம் புகட்ட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## வேலை வாய்ப்பு
## டி.என்.பி.எஸ்.சி–ல் 170 அரசு வேலைகள்!

| விவரம் | தகவல் |
|---|---|
| அமைப்பின் பெயர்: | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) |
| அறிவிப்பு எண்: | விளம்பர எண்: 741 / |
| அறிவிப்பு எண்: | 8/2026 |
| அறிவிப்பு தேதி : | 31.08.2026 |
| பணியின் வகை: | தமிழ்நாடு அரசு வேலை நிரந்தரப் பணி |
| மொத்த காலிப் பணியிடங்கள்: | 170 ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வு (நேர்காணல் பணியிடங்கள்) |
| பணியிடம்: | தமிழ்நாடு முழுவதும் |
| விண்ணப்பம் தொடங்கும் தேதி: | 07.09.2026 |
| விண்ணப்பிக்க கடைசி தேதி: | 06.10.2026 இரவு 11.59 மணி வரை |
| விண்ணப்பிக்கும் முறை | ஆன்லைன் –https://tnpsc.gov.in/ |
| அதிகாரப்பூர்வ இணையதளம்: | TNPSC அதிகாரப்பூர்வ இணையதளம் |

**முக்கிய குறிப்பு:** தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் 170 தொழில்நுட்பப் பணியிடங்களுக்கு ஆட்சேர்ப்பு நடைபெற உள்ளது. ஆர்வமுள்ள தகுதியானவர்கள் 07.09.2026 முதல் 06.10.2026 வரை ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

## தீபாவளி முன்பதிவு; தொடங்கிய சில நிமிடங்களிலேயே விற்று தீர்ந்த டிக்கெட்டுகள்!



சென்னை, செப். 06–

தீபாவளி பண்டிகை நவம்பர் 8–ந்தேதி நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. சொந்த ஊர்களுக்கு செல்பவர்கள் தங்களது பயணத்தை முன்கூட்டியே திட்டமிடும் வகையில், 60 நாட்களுக்கு முன்பே டிக்கெட் முன்பதிவு செய்யும் வசதியை ரெயில்வே வாரியம் வழங்கியது.

அதன்படி, தீபாவளி ரெயில் டிக்கெட் முன்பதிவு இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணிக்கு தொடங்கியது. அதாவது, நவம்பர் 5–ந்தேதி (வியாழக்கிழமை) சொந்த ஊர்களுக்கு பயணிப்பதற்கான டிக்கெட் முன்பதிவு இன்று தொடங்கியது.

அதன்படி பயணிகள் ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளம், செல்போன் செயலி மற்றும் ரெயில் நிலையங்களில் உள்ள டிக்கெட் கவுண்ட்டர்கள் மூலமாக டிக்கெட்டுகளை முன்பதிவு செய்தனர். இந்நிலையில், டிக்கெட்டுகள் சில நிமிடங்களிலேயே முன்பதிவு செய்யப்பட்டு விற்றுத் தீர்ந்துள்ளன. இதில் தென்மாவட்ட ரெயில்களில் பெரும்பாலான டிக்கெட்டுகள் விற்று தீர்ந்தன. இதனைத்தொடர்ந்து, அடுத்தடுத்த நாட்களில் மற்ற தேதிகளுக்கான முன்பதிவு நடைபெற உள்ளது.

## மத்திய அரசு ஊழியர்களுக்கு டி.ஏ. உயர்வு!



சென்னை, செப். 06–

மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி 3 சதவீதம் வரை உயர்த்தப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

ஹோலி மற்றும் தீபாவளி பண்டிகைகளுக்காக அரசு அகவிலைப்படி உயர்வை 2 – 3 மாதங்கள் தாமதமாக அறிவிப்பது வழக்கம். விதிகளின்படி அகவிலைப்படி 50 சதவீதத்தைக் கடக்கும் போது அது அடிப்படை சம்பளம் மற்றும் ஒய்வூதியத்துடன் இணைக்கப்பட வேண்டும். கடந்த 2024 ஜனவரி 1ம் தேதி அன்றே அகவிலைப்படி 50 சதவீதத்தை எட்டியது. ஆனாலும் அது அடிப்படை சம்பளத்துடன் இணைக்கப்படவில்லை. இது தொடர்பாக மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களின் கூட்டமைப்பு சார்பில், மத்திய மந்திரிசபை செயலருக்கு கடிதம் எழுதப்பட்டது. ஆனால் இத்தகைய இணைப்பை அரசு செயல்படுத்தாது என்று மத்திய நிதித்துறை இணை மந் திரி பங்கஜ் சவுத்ரி நாடாளுமன்றத்தில் ஏற்கனவே தெளிவுபடுத்தி இருந்தார்.

இந்நிலையில் மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி உயர்வு குறித்து மத்திய அரசு விரைவில் அறிவிப்பை வெளியிட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த அகவிலைப்படி உயர்வானது 3 சதவீதம் வரையில் இருக்கும் என்று கூறப்படுகிறது. இதன்மூலம் 49 லட்சம் அரசு ஊழியர்களும் 69 லட்சம் ஒய்வூதிய தாரர்களும் பயன்பெறுவர் என்று கூறப்படுகிறது. மத்திய அமைச்சரவை விரைவில் கூட உள்ளநிலையில், அங்கு ஒப்புதல் கிடைத்தவுடன் அரசு ஊழியர்களுக்கும், ஒய்வூதியதாரர்களுக்கும் கடந்த ஜூலை 1ம் தேதி முதல் நிலுவையுடன் கூடிய நிதிச் சலுகைகள் கிடைக்கும். தற்போது வரை 60 சதவீதமாக உள்ள அகவிலைப்படி விகிதம், இந்த 3 சதவீத உயர்விற்குப் பின் 63 சதவீதத்தை எட்டும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## விஷ சாராயம் குடித்து 11 பேர் பலி!



சாகர், செப். 06–

மத்தியப்பிரதேச மாநிலம் சாகர் மாவட்டம் கூகர், நௌராஜ் உள்ளிட்ட கிராமங்களில் விஷ சாராயம் குடித்து 11 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பல தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்த 11 பேர் குடித்த சாராயத்தில் எத்தில் ஆல்கஹால் இருந்ததாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## மின் கட்டணம் உயர்ந்துள்ளதாக குவிந்து வரும் புகார்கள் குறித்து ஆய்வு செய்ய மின்வாரியம் உத்தரவு!

சென்னை, செப். 06–

மின் கட்டணம் உயர்ந்துள்ளதாக குவிந்து வரும் புகார்கள் குறி த்து ஆய்வு செய்ய மின்வாரியம் உத்தரவிட்டுள்ளது. ஜூலை, ஆகஸ்ட் மாதங்களை விட செப்., அல்லது அக்டோபர் மாத கணக்கீட்டில் மின் கட்டணம் 20% அதிகரித்தால், மின் ஆய்வாளர் அல்லது வருவாய் மேற்பார்வையாளர் ஆய்வு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. கூடுதல் கட்டணம் வரும் வீடுகளுக்கான மின் கட்டண வசூலை நிறுத்திவைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது

## மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ்... இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படும்!



சென்னை, செப். 06–

தமிழகத்தில் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச பஸ் பாஸிற்காக, பள்ளிக்கல்வித்துறையின் ‘எமிஸ்’ தளம் மூலம் 70 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் விண்ணபித்துள்ளனர். இவர்களுக்கான ஸ்மார்ட் பஸ் பாஸ் அச்சிடும் பணிகள் இந்த வாரம் தொடங்க உள்ளதாக போக்குவரத்துக்கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் 1–ம் வகுப்பு முதல் பிளஸ்–2 வரை படிக்கும் மாணவர்களுக்கு, 30 கிலோமீட்டர் தூரம் வரை இலவசமாக பயணம் செய்வதற்கான பஸ் பாஸ் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான மாணவர்களின் விவரங்கள் பள்ளிக்கல்வித்துறையின் ‘எமிஸ்’ தளம் வாயிலாக போக்குவரத்துக்கழகங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

மதுரை, கோவை, விழுப்புரம், சேலம், திருநெல்வேலி உள்ளிட்ட 8 போக்குவரத்துக்கழக கோட்டங்களில் இருந்து 70 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கான பஸ் பாஸ் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. நீலகிரி, திருப்பூர், ஈரோடு மற்றும் கோவை மாவட்டங்களை உள்ளடக்கிய கோவை கோட்டத்தில் மட்டும் 9.13 லட்சம் மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். ஆகஸ்டு 31–ந்தேதிக்குள் பஸ் பாஸ் வழங்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் பள்ளிக்கல்வித்துறை மற்றும் போக்குவரத்துக்கழக அதிகாரிகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு பணிகளில் ஏற்பட்ட தாமதத்தால், பஸ் பாஸ் அச்சிடும் பணிகள் தள்ளிப்போனது. தற்போது இந்த வாரம் அச்சிடும் பணி தொடங்கப்பட்டு, செப்டம்பர் மாத இறுதிக்குள் பஸ் பாஸ்கள் பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, புதிய பஸ் பாஸ் கிடைக்கும் வரை மாணவர்கள் தங்களிடம் உள்ள பழைய பஸ் பாஸை பயன்படுத்தி பயணம் செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பள்ளி சீருடையில் வரும் மாணவர்களை பஸ் பாஸ் வைத்திருப்பவர்களாக கருதி பயணம் செய்ய அனுமதிக்குமாறு நடத்துனர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.




## ஸ்ருதி ஹாசன் வழக்கில் அதிரடி தீர்ப்பு!




நடிகை ஸ்ருதி ஹாசனின் புகைப்படங்களை அனுமதியின்றி பயன்படுத்தி உருவாக்கப்பட்ட டீப்ஃபேக் வீடியோக்கள் மற்றும் போலி விளம்பரங்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில், சம்பந்தப்பட்ட வீடியோக்களை நீக்க மும்பை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அவரது நற்பெயர் மற்றும் தனிப்பட்ட உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

## மோகன்லாலுடன் இணையும் பார்த்திபன்!




மோகன்லால் நடிக்கும் 367–வது படமான ‘ஆபரேஷன் கங்கா’ படத்தில் பார்த்திபன், அர்ஜுன் ராம்பால் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். 2022–ம் ஆண்டு ரஷ்யா உக்ரைன் போரின்போது உக்ரைனில் சிக்கிய இந்தியர்களை மீட்ட ‘ஆபரேஷன் கங்கா’ மீட்பு நடவடிக்கையை மையமாகக் கொண்டு இப்படம் உருவாகிறது. 5 மொழிகளில் வெளியாக உள்ள இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

## கடலில் ஒரு களப்போர்... ‘மண்டாடி’ சூரி!




சூரி நடிப்பில் உருவாகியுள்ள ‘மண்டாடி’ திரைப்படத்தின் டிரெய்லர் வெளியாகியுள்ளது. கடலில் நடைபெறும் படகு போட்டியை மையமாகக் கொண்ட இப்படத்தை மதிமாறன் புகழேந்தி இயக்கியுள்ளார். சூரிக்கு ஜோடியாக மகிமா நம்பியார் நடிக்க, சுஹாஸ் வில்லனாக நடித்துள்ளார். சத்யராஜ், ரவீந்திரா விஜய் உள்ளிட்டோரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். செப்டம்பர் 10–ம் தேதி படம் வெளியாகிறது. படகு போட்டி, கடுமையான பயிற்சி மற்றும் சூரிசுஹாஸ் மோதலை மையமாகக் கொண்டு டிரெய்லர் அமைந்துள்ளது.

## நவ.1-க்குள் கடைகளில் தமிழில் பெயர்ப்பலகை!




சென்னை, செப். 06–

தமிழக அரசின் உத்தரவுப்படி, நவம்பர் 1–ம் தேதிக்குள் அனைத்து கடைகளிலும் தமிழில் பெயர்ப்பலகை வைக்க வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தமிழ் பெயருக்கு கீழ் ஆங்கிலத்தில் பெயர் இடம்பெறலாம். உத்தரவை மீறும் கடைகளுக்கு ரூ.2,000 அபராதம் விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐஎஸ்எல் கால்பந்து தொடர் அக்.10-ல் தொடக்கம்!




இந்தியன் சூப்பர் லீக் (ஐஎஸ்எல்) 2026–27 கால்பந்து சீசன் அக்டோபர் 10–ம் தேதி தொடங்குகிறது. சுமார் 8 மாதங்கள் நடைபெறும் இத்தொடரில் 13 அணிகள் பங்கேற்கின்றன. லீக் சுற்றில் ஒவ்வொரு அணியும் உள்ளூர் மற்றும் வெளியூர் அடிப்படையில் மோதும். போட்டிகளின் முடிவில் புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடிக்கும் அணி ஷீல்டு வின்னர் பட்டத்தை பெறும். இதைத்தொடர்ந்து, முதல் 6 இடங்களை பிடிக்கும் அணிகள் ஐஎஸ்எல் கோப்பைக்கான பிளே–ஆஃப் சுற்றில் விளையாடும். பெங்களூரு எப்சி, சென்னையின் எப்சி, ஈஸ்ட் பெங்கால், எப்சி கோவா, மும்பை சிட்டி உள்ளிட்ட அணிகள் தொடரில் களமிறங்குகின்றன.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்

மதுரை மணி நாளிதழ் உண்மை... உங்களுடன்..

தலைப்பு: "ஒரே நாடு... ஒரே தேர்வு" – சமத்துவமா? சிக்கலா?




# ரஷியா-உக்ரைன் போரை நிறுத்த அமெரிக்க தூதுக்குழு பயணம்: 3 நாட்கள் தாக்குதல் நிறுத்தம்!



மாஸ்கோ, செப். 06–

ரஷியா–உக்ரைன் போரை நிறுத்தும் வகையில் பேச்சுவார்தை நடத்த அமெரிக்க தூதுக்குழு ரஷியா சென்று உள்ளது. இதையடுத்து 3 நாட்கள் தற்காலிக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷியா–உக்ரைன் இடையே கடந்த 4 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் போரை நிறுத்த, அமெரிக்கா தற்போது புதிய அதிரடி முயற்சியில் இறங்கியுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பின் மருமகன் ஜாரெட் குஷ்னர் மற்றும் தூதர் ஸ்டீவ் விட்காப் ஆகியோர் அடங்கிய உயர்நிலை தூதுக்குழுவினர், உக்ரைன் போருக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் நேற்று ரஷிய தலைநகர் மாஸ்கோவிற்கு சென்றனர். விமான நிலையத்தில் அவர்களை ரஷியப் பிரதிநிதி கிரில் டிமிட்ரிவ் நேரில் வரவேற்றார். அமெரிக்க அமைதித் தூதர்களின் இந்த அதிரடி வருகையையொட்டி, இரு நாடுகளும் தற்காலிக வான்வழிப் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளன.

உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி தங்களின் தரப்பிலிருந்து எந்த வான்வழித் தாக்குதல்களும் இருக்காது என்று அறிவித்ததைத் தொடர்ந்து, ரஷிய அதிபர் புதினும் உக்ரைன் மீது வான்வழித் தாக்குதல்களை நடத்த வேண்டாம் என ராணுவத்துக்கு 72 மணி நேர (3 நாட்கள்) தற்காலிகத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

மாஸ்கோவில் பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்டு அமெரிக்கத் தூதுக்குழுவினர், இன்று (ஞாயிற்றுக்கிழமை) உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கியைச் சந்திக்க கீவ் நகருக்கு செல்லவுள்ளனர். அமைதி பேச்சுவார்த்தைக்கு இடையில் உக்ரைனின் தொழிற்சாலை மற்றும் குடியிருப்புகளை குறிவைத்து ரஷியா நடத்திய ஏவுகணை தாக்குதலில் பெண்கள் உள்பட 5 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறப்பு அறிவிப்புகளுக்காக காத்திருக்கும் சிறைத் துறை பணியாளர்கள்!



சென்னை, செப். 06–

சிறைத் துறை மானியக் கோரிக்கைகளில் போதிய அறிவிப்புகள் இல்லாமல் ஏமாற்றமடைந்துள்ள சிறைத் துறைப் பணியாளர்கள், முதல்வரின் சிறப்பு அறிவிப்புகளை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

தமிழக அரசின் சிறைத் துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார், கடந்த ஆகஸ்ட் 21–ஆம் தேதி சிறைத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். இதில், சிறைக் கைதிகளின் வசதிக்காக நிறைய அறிவிப்புகள் இருந்த நிலையில், 8–ஆவது அறிவிப்பாக காவல் துறைக்கு இணையாக சிறைத் துறைப் பணியாளர்களுக்கும் சீருடைப்படி உயர்த்தப்படும் என்ற ஒற்றை அறிவிப்பைத் தவிர, சிறைத் துறைப் பணியாளர்களுக்கு வேறேந்த அறிவிப்பும் இல்லை.

குறைந்தபட்சம், காவல் துறையைப் போல பதவி உயர்வை முறைப்படுத்தி, சம்பள உயர்வை வழங்குதல், அதிகரித்துள்ள சிறைக் கைதிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப வேலைப்பளுவைக் குறைக்க கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்துதல், சிறைப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் போன்ற கோரிக்கைகள் இருக்கும் என எதிர்பார்த்திருந்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

இதுகுறித்து சிறைத் துறை பணியாளர்கள் கூறியதாவது: 27.08.2012 அன்று திருத்தப்பட்ட அரசு உத்தரவின்படி சிறைத் துறையில் உதவி சிறை அலுவலர்கள், காவலர்கள் உள்ளிட்ட கடைநிலை களப் பணியாளர்களாக 3,910 பணியிடங்கள் மட்டுமே உள்ளன. சிறைகளில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுவரும் நிலையில், 14 ஆண்டுகளாக பணியிடங்கள் உயர்த்தப்படவில்லை. இருக்கும் பணியிடங்களிலும் சுமார் 250 காலிப் பணியிடங்கள் உள்ளன.

அதிகரித்துள்ள வேலைப்பளு: அதிக பரப்பளவு கொண்ட சிறைப் பாதுகாப்புப் பணியில் ஒரு ஷிப்டுக்கு 10 முதல் 15 காவலர்களே ஈடுபடுத்தப்படுவதால் வேலைப்பளு அதிகரித்துள்ளது. எஞ்சியவர்களுக்கு கைதிகள் மேற்கொள்ளும் வியாபாரம், தோட்டம், பெட்ரோல் நிலைய வேலைகளைக் கண்காணிப்பது, அதிகாரிகளுக்கு பணி செய்வது போன்ற பணிகளில் ஈடுபட செய்வதால் பாதுகாப்பு குறைகிறது. இதனால் சிறைக் கைதிகள் தற்கொலை, தப்பித்தல் போன்ற சம்பவங்கள் நிகழ்கின்றன.

முக்கியக் கோரிக்கைகள்: அதிகரித்து வரும் சிறைக் கைதிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிதாக 1,000 காவலர்கள் பணியிடங்களை உருவாக்குவதுடன், 250 காலிப் பணியிடங்களையும் நிரப்ப வேண்டும். 24.02.1995–இல் வெளியான அரசாணை எண் 104–இன் படி 8 மணிநேர பணி, வார விடுமுறை, அரசு விடுமுறை நாள்களில் பணி செய்தால் ஈட்டிய விடுப்பு போன்றவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

காவல் துறையைப் போல, 10, 15, 25 ஆண்டுகளில் பதவி உயர்வு வழங்கி ஊதிய முரண்பாட்டை களைய வேண்டும். 2012–இல் 1,116 இரண்டாம் நிலை காவலர்கள் பணியை அரசுக்கு சரண் செய்ததை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும். சுமார் 130 கிளைச் சிறைகளில் ஆய்வாளர் நிலையில் உள்ள துணை சிறை அலுவலர் பதவியை கண்காணிப்பாளர்களாகவும், அவர்களுக்குக் கீழ் பணிபுரியும் 2 முதன்மை தலைமைக் காவலர்களை சிறப்புஉதவிசிறை அலுவலர்களாகவும் தரம் உயர்த்தி நியமனம் செய்ய வேண்டும். இதே போல, 14 மாவட்ட சிறைகளில் அரசுக்கு ஒப்புவிப்பு செய்தகூடுதல்கண்காணிப்பாளர்கள், சிறை அலுவலர்களை நியமிக்க வேண்டும். இவற்றை செய்தால், பதவி உயர்வு சாத்தியமாகும்.

திருநங்கைகளுக்கான சிறப்புப் பிரிவு: சிறைகளில் திருநங்கைகளுக்கான சிறப்புப் பிரிவுகளை உருவாக்க வேண்டும். சிறைவாசி இயற்கையாக இறந்தாலோ, தற்கொலை செய்து கொண்டாலோ இழப்பீடு கோரும் செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

குடியிருப்புகள் மேம்பாடு: சிறைப் பணியாளர்களுக்கு போதிய குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். மோசமாக இருக்கும் குடியிருப்புகளை மேம்படுத்தித் தர வேண்டும். குடியிருப்புகளில் மருத்துவ வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். மனஅழுத்தம் மற்றும் மனஉளைச்சலை சிறைப் பணியாளர்களுக்கு மன இயல் நிபுணர்களின் ஆற்றுப்படுத்துதல் பயிற்சி அளிக்க வேண்டும் என்றனர்.

சிறை அதிகாரிகள் தொடர்ந்து கைதிகளுக்கு பல்வேறு பணிகளை வழங்கி சிறைத் துறையை வருமானம் ஈட்டும் துறையாக மாற்றி வருகின்றனர். மாற்றம் எனக் கூறி ஆட்சிக்கு வந்துள்ள தவெக அரசு, சிறைப் பணியாளர்களின் கோரிக்கைகளை கவனத்தில் கொள்ள வேண்டும் என ஓய்வு பெற்ற சிறை காவலர் எஸ். கருணாமூர்த்தி உள்ளிட்டோர் தெரிவித்தனர்.

காவல் துறை மானியக் கோரிக்கைக்கு பதிலளிக்கையில் சிறைத் துறைக்கும் புதிய அறிவிப்புகளை வெளியிடுவார் என சிறைப் பணியாளர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

# வடக்கில் பிரபலமாகும் முதல்வர்!



புதுடில்லி,செப். 06–

பார்லிமென்டில் பல நிலைக்குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு குழுவிலும், அனைத்து கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.,க்கள் உறுப்பினர்களாக உள்ளனர்; நாட்டின் பல மாநிலங்களுக்கு சென்று ஆய்வு மேற்கொள்வர். கள ஆய்வுகளின்போது தாங்கள் சேகரித்த விபரங்கள், கோரிக்கைகள் மற்றும் குறைகளை, பார்லி., செயலக அதிகாரிகள் உதவியுடன், எம்.பி.,க்கள் முழுமையாக தொகுத்து, அறிக்கையாக பார்லிமென்டில் தாக்கல் செய்வர்.

இந்த நிலைக்குழு தலைவர்களுக்கு, சபாநாயகர் ஓம் பிர்லா ஆலோசனை அளித்துள்ளார். 'மாநிலங்களுக்கு செல்லும்போது, சம்பந்தப்பட்ட முதல்வர்களை சந்தித்து மாநில வளர்ச்சி, தேவைகள் என, பல விஷயங்களை விவாதியுங்கள்; அப்போது தான் மாநிலத்திற்கு என்ன தேவை என்பது தெரிய வரும்; அதை வைத்து பார்லி.,யில் பேசலாம். தமிழகம் செல்வோர், முதல்வர் விஜயை கண்டிப்பாக சந்திக்க வேண்டும்; ஏனெனில், கட்சி ஆரம்பித்த இரண்டே ஆண்டில் ஆட்சியைப் பிடித்தவர்; அவரிடமிருந்து நிறைய விஷயங்களை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்' என, வலியுறுத்தி உள்ளார்.

இதையடுத்து, நிலைக்குழுவில் உள்ள மேற்கு வங்கம், மஹாராஷ்டிரா எம்.பி.,க்கள், முதல்வர் விஜயை சந்திக்க ஆவலாக உள்ளனர்; ஒரு சில நிலைக்குழு எம்.பி.,க்கள் முதல்வரை சந்தித்து விட்டனராம்.

விஜய் குறித்த காணொளிகளை, வட மாநிலங்களில் பலர் சமூக வலைதளங்களில் வெளியிட்டு வருகின்றனர். தமிழகத்தைச் சேர்ந்த மறைந்த எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவை அடுத்து, இப்போது வட மாநிலங்களில் பிரபலமாக இருப்பவர், முதல்வர் விஜய் தான். 'இதனால் தான், அடுத்த பிரதமர் விஜய்' என, த.வெ.க.,வினர் கூறி வருகின்றனர்.

# பூண்டு விலை கிடுகிடு உயர்வு!

விழுப்புரம், செப். 06–

மராட்டிய மாநிலத்தில் இருந்து தமிழ்நாட்டுக்கு பூண்டின் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. அதிலும் நாளொன்றுக்கு விழுப்புரம் மார்க்கெட் டுக்கு மட்டும் சுமார் 10 டன் முதல் 15 டன் வரை பூண்டு விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு வந்தது. ஆனால் கடந்த சில வாரமாக பூண்டு வரத்து குறைந்து விட்டதாகவும், தற்போது நாள் ஒன்றுக்கு 5 டன் பூண்டு வரத்து வருவதாகவும், இதன் காரணமாக விலை அதிரடியாக உயர்ந்து இருப்பதாகவும் வியாபாரிகள் கூறுகின்றனர். கடந்த மாதத்தில் ஒரு கிலோ பூண்டு ரூ.80 முதல் ரூ.100 வரை கிடைத்தது. நல்ல தரமான உயர்ரக பூண்டு ஒரு கிலோ ரூ.120 முதல் ரூ.140–க்கு கிடைத்து வந்தது. ஆனால் தற்போது அது தலைகீழாக மாறிவிட்டது. ஒரு கிலோ பூண்டு ரூ.300 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அதாவது நாட்டுப்பூண்டு சிறிய ரகம் கிலோ ரூ.150 முதல் ரூ.160 வரை யும், நடுத்தரம் கிலோ ரூ.180 முதல் ரூ.220 வரையும், பெரிய அளவிலான நல்ல தரமான உயர்ரக பூண்டு கிலோ ரூ.280 முதல் ரூ.300 வரையும் விற்பனை செய்யப்படுகிறது. அதுபோல் ஒரு கிலோ மலைப்பூண்டு கடந்த மாதம் ரூ.150–க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் தற்போது ரூ.350–க்கு விற்பனை செய்யப்படுகிறது. விளைச்சல் பாதிப்பு ஒரு பக்கம் கூறப்பட்டாலும், மராட்டிய மாநிலத்தில் இருந்து உக்ரைன் நாட்டுக்கு பூண்டு ஏற்றுமதி செய்யப்படுவதும் வரத்து குறைவுக்கு ஒரு காரணம் என்றும், இனி வரும் நாட்களில் மேலும் பூண்டு விலை சற்று உயரக்கூடும் என்று உணவு தானிய மொத்த சந்தை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். பூண்டு விலை உயர்வினால் இல்லத்தரசிகள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

# ஏமன் மற்றும் ஹவுதிகள் இடையே நடந்த தாக்குதலில் 60 பேர் பலி!



ஈரான், செப். 06–

ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சி இயக்கத்திற்கும் சவுதி அரேபியா ஆதரவை பெற்ற ஏமன் அரசாங்க படைகளுக்கும் இடையே நடந்த மோதலில், 60க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக தனியார் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சி இயக்கத்திற்கும் சவுதி அரேபியா ஆதரவை பெற்ற ஏமன் அரசாங்க படைகளுக்கும் இடையே தாக்குதல் நடந்து வருகிறது.

ஹவுதி கிளர்ச்சியாளர்கள் 2014–ஆம் ஆண்டு ஏமன் தலைநகரான சனா நகரத்தை கைப்பற்றி, அப்போதைய அரசாங்கத்தை வெளியேற்றினர். அதை தொடர்ந்து சவுதி தலைமையிலான கூட்டணி, ஏமன் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கவும், ஈரானின் முக்கிய கூட்டாளியான ஹவுதிகளை எதிர்த்து போராடவும் தொடங்கியது. இதையடுத்து ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் ஏமன் அரசாங்க படைகளுக்கும் கடந்த 2022–ஆம் ஆண்டு போர் ஒப்பந்தம் போடப்பட்டது.

ஹவுதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சனா நகரத்தில், ஈரான் நாட்டிற்கு சொந்தமான விமானம் ஒன்று தரையிரங்க முயன்றது. அப்போது ஏமன் அரசாங்கம் விமான நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து, 2022–ஆம் ஆண்டு போடப்பட்டிருந்த போர் ஒப்பந்தம் முடிவுக்கு வந்தது.

இதைத்தொடர்ந்து இவர்களுக்கு இடையேயான மோதல் போக்கு தொடர்ந்து நடந்து வருகிறது. இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை ஏமனில் உள்ள மேற்கு தைஸ் மற்றும் தெற்கு ஹொடைதா பகுதிகளில் ஹவுதிகள் தாக்குதலை நடத்தினர்.

இந்த தாக்குதலில் ஏமன் அரசாங்க படைகள் மற்றும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் படையை சேர்ந்த 129 பேர் கொல்லப்பட்டனர். இதைத்தொடர்ந்து நேற்று ஏமனின் தென்மேற்கு பகுதியில் ஹவுதிகள் மீண்டும் நடத்திய தாக்குதலில், 26 ஏமன் அரசாங்க படையினரும், 31 ஹூதி கிளர்ச்சியாளர்களும் கொல்லப்பட்டனர். ஏமன் கடற்கரை யோர துறைமுக நகரங்களை ஒட்டி அமைந்துள்ள, பாப் அல்–மண்டேப் ஜலசந்தியை கைப்பற்றும் நோக்கில், ஹவுதிகள் தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

சூயஸ் கால்வாய்க்கு செல்லும் கப்பல்களுக்கு பாப் அல்–மண்டேப் ஜலசந்தி ஒரு முக்கியமான கடல்வழி தளமாக உள்ளது. உலகளாவிய கடல்வழி வர்த்தகத்தில் சுமார் 10 சதவீதம் இந்த ஜலசந்தி வழியாகவே நடைபெறுகிறது.

அமெரிக்கா ஈரான் போர் தொடங்கிய பிறகு, சவுதி அரேபியா பல மாதங்களாக எண்ணெய் ஏற்றுமதி செய்ய இந்த பாப் அல்–மண்டேப் ஜலசந்தியை பயன்படுத்தி வருகிறது. மார்ச் 2026 முதல் ஹார்முஸ் ஜலசந்தி கிட்டத்தட்ட மூடப்பட்டதன் விளைவாக ஏற்கனவே கடுமையாக உயர்ந்துள்ள உலகளாவிய பொருட்களின் விலையை, பாப் அல்–மண்டேப் பகுதியில் கப்பல் போக்குவரத்து தடைபட்டால் அது மேலும் அதிகரிக்க செய்யும் என அஞ்சப்படுகிறது. ஹவுதிகள் அந்த துறைமுக நகரத்தை மீண்டும் கைப்பற்றி, செங்கடல் கடற்கரையோரமுள்ள முக்கிய பகுதிகளையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தால், அது செங்கடலில் நடைபெறும் கடற்படை போக்குவரத்தை கட்டுப்படுத்த அவர்களுக்கு வழிவகை செய்யும்.

ஹவுதிகளின் தாக்குதல் குறித்து ஏமன் அரசாங்க ராணுவ அதிகாரி கூறுகையில், ஹவுதிகளின் முன்னேற்றத்தை தடுப்பதற்காக ஏமன் நாட்டில் உள்ள ஏடன் நகரத்தில் இருந்து கூடுதல் படைகள் வந்து கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

# தவெக பிரமுகர் ஓட ஓட வெட்டிக்கொலை... 5 பேர் கைது!



சென்னை, செப். 06–

சென்னை அடையாறு சாஸ்திரி நகர் வண்ணாந்துறைப் பகுதியை சேர்ந்தவர் கண்ணன். அ.தி.மு.க.வில் 174வது தெற்கு வட்டக் செயலாளராக இருந்த கண்ணன், சமீபத்தில் அக்கட்சியில் இருந்து விலகி தமிழக வெற்றிக் கழகத்தில் சேர்ந்து பணியாற்றி வந்தார்.

இந்த நிலையில் நேற்று இரவு (செப்.5) 9 மணி அளவில் வண்ணாந்துறை பகுதியில் சென்று கொண்டிருந்த கண்ணனை மர்ம நபர்கள் சுற்றி வளைத்தனர். அவர்களது கையில் அரிவாள், கத்தி உள்ளிட்ட பயங்கர ஆயுதங்கள் இருந்தன.

இதைபார்த்து அதிர்ச்சியில் உறைந்துபோன கண்ணன் அங்கிருந்து ஓட்டம் பிடித்தார். இருப்பினும் ரவுடி கும்பல் கண்ணனை ஓட ஓட விரட்டிச் சென்று சரமாரியாக வெட்டியது. இதில் நிலைகுலைந்த அவர் சம்பவ இடத்திலேயே துடிதுடிக்க உயிரிழந்தார்.

இது பற்றி தகவல் கிடைத்ததும் சாஸ்திரி நகர் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று கண்ணனின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதற்கிடையே கண்ணன் கொலை செய்யப்பட்ட தகவல் பரவியதும் அப்பகுதியைச் சேர்ந்த அவரது உறவினர்கள் திரண்டு முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போலீசாரின் ரவுடிகள் பட்டியலில் ஏற்கனவே இடம் பெற்றிருந்த கண்ணன் மீது பல வழக்குகள் நிலுவையில் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

திருவான்மியூர் பகுதியில் நடைபெற்ற கொலை ஒன்றில் பழிக்குப் பழி வாங்கும் வகையில் கண்ணனை மர்ம நபர்கள் வெட்டி கொலை செய்திருக்கலாம் என்கிற சந்தேகம் எழுந்துள்ளது. அதே நேரத்தில் ரியல் எஸ்டேட் தொழிலில் ஈடுபட்டு வந்த கண்ணன் அது தொடர்பான முன்விரோதம் காரணமாக கொலை செய்யப்பட்டாரா என்பது பற்றியும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. கண்ணன் சமீபத்தில் அ.தி.மு.க.வில் இருந்து விலகி தவெக–வில் இணைந்திருந்ததால், அவரது அரசியல் நடவடிக்கைகள் பிடிக்காமல் எதிராளிகள் தீர்த்து கட்டினார்களா என்கிற கோணத்திலும் விசாரணை நடைபெற்று வருகிறது. சம்பவ இடத்தில் இருந்த சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் ஐந்து பேரை கைது செய்து விசாரணையை தொடர்ந்து வருகின்றனர்.

# கள்ளச்சாராயம் குடித்து 9 பேர் பலி; 25 பேருக்கு உடல்நலம் பாதிப்பு!

போபால், செப். 06–

மத்தியப் பிரதேசத்தின் சாகர் பகுதியில் கள்ளச்சாராயம் அருந்தியதால் ஒன்பது பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை துவங்கி உள்ளனர்.

மத்தியப் பிரதேசத்தின் சாகர் மாவட்டத்தில் உள்ள பண்டா தாலுகாவுக்கு உட்பட்ட பராஜ் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கள்ளச்சாராயம் குடித்து 25க்கும் மேற்பட்டோர் உடல்நலம் பாதிக்கப்பட்டு பாதிகக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

இவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்ப தால், பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.

அதுமட்டுமின்றி இதுவரை 9 பேர் உயிரிழந்துள்ளனர். மாவட்ட எஸ்பி அனுராக் சுஜானியா தலைமையிலான போலீஸ் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணையை துவங்கி உள்ளனர். உயிரிழந்தவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பாக மாவட்ட நிர்வாகம் சார்பில் மாஜிஸ்திரேட் விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

சாகர் மாவட்ட கலெக்டர் பிரதிபா பால் நிருபர்களிடம் கூறியதாவது: கள்ளச்சாராயம் குடித்து பலர் உடல்நலம் பாதிக்கப்பட்டு உள்ளனர். இரண்டு கிராமங்களில் டாக்டர்கள் குழு பரிசோதனைகளை நடத்தி வருகிறது. அறிகுறிகள் தென்பட்டால் டாக்டர்களை அணுக வேண்டும்.

குறிப்பாக கடந்த 24 முதல் 48 மணி நேரத்தில் மது குடித்தவர்கள் கண்டிப்பாக டாக்டர்களிடம் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். நாங்கள் கண்காணித்து வருகிறோம்; இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது," என்றார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020